அறிவினு ளாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் V.] SEPTEMBER, 1905-ஞ செப்டெம்பர். [இலக்கம் 3.

ஸிரியா நகரத்தில் ஜீவஹிம்ஸை நிவாரணம்.

அரபி தேசத்தில் ஸிரியா நகரத்திலே பதினைந்து பிராயமுள்ள ஒரு வாலிபனால் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைக் கேட்டு யாவரும் ஸந்தோஷப்படுகிறார்கள். அந்தச் சங்கம் ஸ்தாபிக்கும்படியான பெருமை தனக்கு நேரிட்ட காரணத்தை அச்சிறுவன் தானே யெடுத்துச் சொல்லியிருக்கிறான். அதாவது:—

"தேசயாத்திரையாக அமெரிக்கா தேசத்துப் பெருமாட்டிகள் சிலர் எங்களுடைய பட்டணத்திற்கு வந்தார்கள் அவர்களை நாங்கள் வரவழைத்து உபசாரம் செய்ததில் அவர்கள் எங்களிடத்தில் அதிகமான விசுவாசமுடையவர்களாகி, தாம் சுதேசம்போய்ச் சேர்ந்தபிறகும் அத்தேசத்து விசேஷங்களைப் பற்றி யடிக்கடி எங்களுக்குக் கடிதமெழுதி வரலானார்கள். அக்கடிதங்களில் அவர்கள் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் ஜீவகாருணிய சங்கங்கள் விசேஷமாய் ஏற்பட்டிருப்பதை அதிகமாய் எழுதிவந்தார்கள்; ஜீவகாருணிய விஷயமாய் அச்சிடப்பட்ட பல ஸஞ்சிகைகளையும் எங்களுக்கு அனுப்பிவந்தார்கள் அன்றியும், 'வாயில்லாத எளிய ஜந்துக்களை இம்சிப்பது கொடிய பாவம்' என்று குழந்தைப்பருவத்தில் எங்களுடைய தாய் எமக்குப் போதித்து, ஜீவகாருணியத்தின் விதையை எங்களுடைய மனத்தில் விதைத்திருந்தாள்.

அதனால், நான் பிரதிதினம் கல்விச்சாலைக்குப் போகும்பொழுதும் வரும்பொழுதும், அமெரிக்கா தேசத்து நண்பர்கள் எழுதும் பத்திரிகைகளைப் பற்றியே ஆலோசனை செய்துவந்தேன். 'நமது சொந்தநாட்டிலும் நாமேன் அப்படிப்பட்ட நற்காரியங்கள் செய்யலாகாது' என்று அப்பொழுது என் புத்தியில் ஆலோசனை தோற்றியது. எமது தேசத்தில் ஜீவஹிம்ஸை நிவாரணசங்கமே கிடையாது; ஜீவஹிம்ஸைமாத்திரம் அதிகமாயிருந்தது. வாயில்லா ஜந்துக்களை இம்சிப்பவனை யாராவது கண்டு கண்டித்தால், அப்படிக் கண்டிப்பவனைக் கண்டவரெல்லாம் நகைப்பார்கள். ஆனால், மற்றத் தேசத்தவரைப்பார்க்கிலும் எங்கள் தேசத்தாருக்கு வாயில்லா ஜந்துக்களிடத்தில் பக்ஷம் அதிகமே. இங்கே குதிரைவாலைக் கூழையாக்குவது, முள் கடிவாளம் போடுவது முதலான கொடுமைகள் செய்வதில்லை; ஆனால், அடிமைப்பட்ட பிராணிகளை அளவுக்குமிஞ்சி யுழைக்கச்செய்வது, அதிகமாய் அடிப்பது, பக்ஷிகளைப் பிடித்து வருத்துவது, நாய், பூனை முதலான பிராணிகளின்மேல் கல்லெடுத்தெறிவது முதலிய கொடுமைகள் அதிகம். இவையெல்லாவற்றிலும் மேலான கொடுமை ஒன்று உண்டு: அதாவது, குதிரை முதலான பிராணிகள் நோய்பிடித்தாவது, கிழமாகியாவது உடையவனுக்கு உபயோகமில்லாமற்போனால், அதை ஆதரியாமல் வெளியே ஓட்டிவிடுவார்கள். சொந்தக்காரர்கள் தங்களுடைய பிராணிகளிடத்தில் கருணையும் பக்ஷமுமுள்ளவர்களாயிருந்தாலும், கூலி வண்டிக்காரர்கள் செய்கிற கொடுமை சொல்லி

முடியாது. கொடுமை செய்வது பொல்லாத பாவமென்று அதைக் கருத்திலும் கொள்ளாத தருமபுத்தியும் நெஞ்சுருக்கமுமுள்ள நல்லவர்கள் அநேகர் இருந்தாலும், கொடுமை செய்பவர்களை வேண்டாமென்று விலக்குவது தமது பெருமைக்குக் குறைவென்றும், தமக்கு அவமானமான காரியமென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். 'இங்கே படிப்பில்லாமையால் கொடுமை அதிகமாயிருக்கிறது; இதற்கு நாமென்ன செய்யலாம்' என்று மற்றவர்கள் சொல்லிச் சும்மாயிருக்கிறார்கள்.

இவைகளைப்பற்றி நான் நன்றாக ஆலோசனை செய்து என்னுடைய அபிப்பிராயத்தை என்னுடைய நண்பன் ஒருவனிடம் வெளியிட்டேன். இது நல்ல காரியந்தானென்று அவனும் அதற்குச் சம்மதித்தான். பிறகு அந்த அபிப்பிராயத்தை நாங்கள் எமது வித்தியாசாலைத் தலைவருக்குத் தெரிவித்தோம். அதைக்கேட்டு அவர் மிகவும் ஸந்தோஷப்பட்டு எங்கள் முயற்சிக்குத் தம்மாலான ஸஹாயம் செய்யலானார். நான்கு பண்டிதர்களும் பதினாறு வித்தியார்த்திகளும் எங்களுடன் சேர்ந்தார்கள். இவர்களுடைய உதவியைக்கொண்டு உடனே ஜீவஹிம்ஸை நிவாரண சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அதுகண்டு பலர் ஏளனம் செய்யலானார்கள். மாணுக்கர்கள் பலர் ஒன்றுகூடி எங்களுக்கு 'மிருகக்கூட்டம்' என்று வசைப்பெயர் வைத்துப் பரிஹாஸம் செய்தார்கள். யார் என்ன செய்தாலும் நாங்கள் வேலையை நிறுத்தாமல் நடத்திவந்தோம். 'இது எத்தனைநாளைக்குக் கூத்தாடப்போகிறது? சீக்கிரமே நின்றுபோம்' என்று அநேகர் அதைரியப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அதையும் நாங்கள் லக்ஷியம் செய்யவில்லை; ஸபையில் சேர்ந்தவர்கள் தொகை கொஞ்சமாயிருந்தாலும், மாதந்தோறும் நாங்கள் கூட்டம்கூடி மேலுமேலும் நடத்தவேண்டிய காரியங்களைப்பற்றித் தீர்மானஞ்செய்து ஜீவஹிம்ஸையை விலக்கப்பாடுபட்டுவந்தோம். சென்ற ஜனவரிமீ முதல் வருஷத்திருநாள் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. அந்தச் சபைக்குப் பண்டிதர்களும் பிரபுக்களும் பலர் விஜயஞ்செய்து மிகவும் கொண்டாடினார்கள்."

அபாயத்தினின்று விடுவித்த நல்ல நாய்.

சிலநாளைக்குமுன் ஒரு சத்திரத்தில் இராத்திரி திடீரென்று தீப்பற்றியது. அந்தச் சத்திரம் இரண்டடுக்கு மரக்கட்டடமான ஒரு பெரிய மாளிகை. அந்தச் சத்திரத்தில் சத்திரக்காரன் குடும்பத்துடனே குடியிருந்தான். அவனுக்கு ஏழு பிள்ளைகள்; பெண்சாதி ஒருத்தி. அன்றையதினம் அதில் பிரயாணிகள் பதினைந்துபேர் வந்து இறங்கியிருந்தார்கள். இவர்களெல்லாம் இராத்திரி நன்றாய்த் தூங்கும்பொழுது தீப்பற்றிக்கொண்டது. அங்கே ஒரு புறத்து அறையில் சத்திரத்து நாய் படுத்து தூங்கிக்கொண்டிருந்தது; நாய் படுத்திருந்த அறைக் கதவோ பூட்டப்பட்டிருந்தது. அந்த அறையில் புகை சூழ்ந்துகொள்ளவே நாய் விழித்துக்கொண்டது. விழித்து எழுந்து நாய் மோப்பத்தினால் நேரிட்டிருக்கும் அபாயம் இன்னதென்று தெரிந்துகொண்டு குரைக்க ஆரம்பித்தது. அண்டையில் படுத்திருந்த யாரோ ஒருவன், 'சீ, நாயே, குரைக்காதே' என்று அதை அதட்டிவிட்டு மறுபடி தூங்கிப்போனான். நாயோ இன்னும் அதிகமாகக் குரைக்கத் தொடங்கிற்று. தீயோ, வரவர அதிகமாகிக்கொண்டிருந்தது. நாய்க்கோ அறையை விட்டு வெளியே போக வழி யகப்படவில்லை.

அந்த அறையின் ஒருபுறத்துச் சுவரில் ஒரு சாளரமுண்டு. பிள்ளைகளுடனே நாய் விளையாடும்பொழுது அந்தச் சாளரத்துவழியாய் அடிக்கடி ஏறிக் குதிப்பது வழக்கம். அந்தச் சாளரம் இப்பொழுது நாய்க்கு நினைவுவந்தது. உடனே அது ஒரே பாய்ச்சலாய் அந்தச் சாளரத்துவழியாய் வெளியே குதித்துக் குரைத்துக்கொண்டே வேகமாய் ஓடி, தன் எஜமானன் படுத்திருக்கும் அறையின் கதவண்டை போய்ச் சேர்ந்தது. நாய் குரைப்பதைக் கேட்டு சத்திரக்காரன் விழித்துக்கொண்டு பார்த்தான்; வீட்டில் தீப்பற்றிக்கொண்டு எரிவது அவனுக்கு நன்றாய்த் தெரிந்துபோயிற்று.

நாய் அவ்வளவோடு நிற்கவில்லை; தன் யஜமானனை யெழுப்பினவுடனே அது வாயோயாமல் குரைத்துக்கொண்டே பிரயாணிகள் படுத்திருக்கும் அறையண்டைக்கு ஓடிற்று. நாய் குரைப்பதைக் கேட்டு அவர்களும் கண்விழித்துக்கொண்டு நேரிட்டிருக்கிற மிகக் கொடிய அபாயத்தை உணர்ந்து தக்ஷணமே யெழுந்து வீதியி லோடிப்போனார்கள். நாய்மாத்திரம் வீட்டைவிட்டு வெளியே ஓடிப்போகவில்லை. வெளியே போனவர்கள் அங்கே அந்த நாயைத் தேடினார்கள். அது அங்கெங்கும் காணப்படவில்லை.

இவர்கள் வெளியே போனபிறகுதான் தண்ணீரிறைக்கும் இயந்திரம் வரவழைத்து வீட்டில் பற்றிய பெருந்தீ அவிக்கப்பட்டது. தீ அணைந்தபின்பு சத்திரத்திற்குள்ளே போய்ப் பார்க்கையில் அங்கே ஒரு அறையில் இந்த உத்தமமான நாய் படுத்திருந்தது. ஆனால், ஐயோ பாவம்! அதனுடம்பில் மயிரெல்லாம் தீயின் அனல்பட்டுத் தீய்ந்துபோயிருந்தது. ஆயினும், யஜமானன் அங்கே போய்க் கூப்பிட்டபோது அது முன்போலவே மிகுந்த பிரியத்துடன் அவனெதிரே போய் நின்றது. இது நியூயார்க்கு நகரத்தில் உண்மையாக நடந்த கதையேயாம்.

நீ சொல்லக்கூடுமா?

இராகம்—தேசிக தோடி. தாளம்—சாப்பு.

பச்சை மரத்திலே யெத்தனை, வானில்
பரந்து விளங்கு நக்ஷத்திரமும்,
நிச்சயமாய்க் கடல் மீன்களு மெத்தனை
நீதெரிந்தே சொல்லக் கூடுமதோ!

நாயதன் வாலைக்குழைப்பதும், ஊற்றுக்கண்
நன் கடையாம விருப்பதுவும்,
காய்வுறு தாமரை மட்கியபின், தழை
காரணமும் சொல்லக் கூடுமதோ!

நாய்களுடைய நற்புத்தி.

ஒரு குடியானவன் நல்ல நாயொன்று வைத்திருந்தான். அவன் தன் குடும்பத்தின் கஷ்டத்திற்காக அந்த நாயை மற்றொருவனுக்கு விற்று அந்தப்பணத்தைக் குடும்பச் செலவுக்குச் செலவுசெய்துகொண்டான். அந்த நாயை வாங்கினவன் அதைப் புகை வண்டியிலேற்றி வெகுதூரத்திலுள்ள தன் ஊருக்குக் கொண்டுபோய்விட்டான். அந்த நாய் தன் சொந்த யஜமானனைப் பிரிந்தநாள்முதல் சந்தோஷமில்லாமல் சோர்ந்து தவித்துக்கொண்டிருந்தது.

இந்த நாய் இப்படிச் சோர்ந்துகிடக்கிறதே யென்று அதை வாங்கினவன் ஒருநாள் தன் ஊரில் வெளியே உலாவிவரக் கூட்டிக்கொண்டு போனான். அங்கே ஒரு இடத்திலே உட்காந்து அவன் அந்த நாயின் முகத்தைப் பிரீதியுடனே பார்த்து, 'என் அருமைத்தோழனே! இப்பொழுது நீ உன் பழைய யஜமானன் ஊரைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டிருக்கிறாயே. அவனூர் இவ்வளவுதூரம் இல்லாமல் சமீபத்திலிருக்குமானால், நீ சந்தோஷப்படும்படி நான் இப்பொழுதே உன்னை அவ்விடத்திற்கு அனுப்பிவிடுவேன். என்னசெய்வது? அதோ பார்த்

தாயா? அந்தப் பக்கத்திலேதான் உன் யஜமானன் வீடு இருக்கிறது’ என்று மேற்கு முகமாக புகை வண்டிப் பாதையைச் சுட்டிக் காட்டிச் சொன்னான்.

அதைக்கேட்டவுடனே அந்த நாய் எழுந்து தன் வாலையாட்டிக்கொண்டு குரைத்துத் தனக்கு உண்டான மிகுந்த சந்தோஷத்தை வெளியிட்டு அந்தப் புதிய யஜமானனுடைய கையை நக்கிக்கொடுத்துச் சிறிதுதூரம் ஓடி மறுபடி அந்த யஜமானனைப் பார்த்துக் குரைத்துவிட்டு அவன் காட்டிய திசைக்கு நேராகவே ஓட்டம்பிடித்தது. இவன் தன்னாலானவளவும் அதைத்திரும்பிவரும்படி உரத்துக் கூப்பிட்டுப்பார்த்தான். சிறிதும் பிரயோஜனப்படவில்லை. அது கண்ணுக்கெட்டாத தூரம் போய்விட்டது.

இரண்டு வாரத்திற்குப் பிறகு அந்தக் குடியானவனுக்கு அண்டைவீட்டிலிருந்த நண்பனொருவன் இவனுக்குக் கடிதம் ஒன்று எழுதினான். அதில் கண்ட விஷயமாவது, ‘இன்றையதினம் நான் வெளியே போய் வீட்டிற்குத் திரும்பி வரும்போது அண்டை வீட்டிலிருந்த ஒருவன் என்னைக் கூப்பிட்டு, ‘தோழா! உன் நண்பன் இரண்டு வாரத்திற்கு முன் வாங்கிக்கொண்டுபோன நாய் இதோ திரும்பிவந்துவிட்டது’ என்று சொன்னான். அதைக் கேட்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிற்று. அது கண்டு அவன், ‘நீ சந்தேகப்படவேண்டாம் வா, இதோ காண்பிக்கிறேன்’ என்று என்னை அந்த வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனான். அங்கே அந்த நாய் ஒரு குழந்தையின் பக்கத்திலே படுத்துக் கொண்டிருந்தது. அது அந்தக் குழந்தையினுடைய நாய், தன் நாயை விட்டுப் பிரியவே அக் குழந்தைக்கு உடம்பு மிகவும் அசௌக்கியமாகிவிட்டது. வைத்தியரும் பார்த்து, இனி இந்தக் குழந்தை பிழைப்பது கஷ்டம் என்று கைவிட்டாராம். இப்படியிருக்க, ஒருநாள் தன் நாய் திரும்பித் தன்னிடம் வந்ததைப் பார்த்தவுடனே அந்தக் குழந்தை யெழுந்து ஆநந்தக் கூச்சலிட்டது. பிறகு அக்குழந்தை மெல்லமெல்ல எழுந்திருந்து ஸஞ்சரிக்கத் தொடங்கியது’ என்று எழுதியிருந்தது.

அப்புறம் அக்குழந்தை கொஞ்சம் கொஞ்சமாகச் சவுக்கியமடைந்தது. பிறகு தகப்பன் தான் அந்த நாயை ஒருநாளும் விற்பதில்லையென்று தீர்மானம் செய்துகொண்டான். இவையெல்லாங்கூட ஆச்சரியமல்ல; அந்த நாயை வாங்கினவன் அதைத் தனக்கு மறுபடி கொடுக்கச்சொல்லிக் கேட்காமல் அவனுக்கே கொடுத்துவிட்டதோடு தான் கொடுத்த பணத்தையும் அவனுக்கே கொடுத்துவிட்டான். அதுவல்லாமல் தான் சந்தோஷப்பட்டுப் பின்னும் சிறிது பொருள் அவனுக்கு வெகுமதி கொடுத்தான்.

நியூ ஆர்லீன்ஸில் நீர்த் தொட்டிகள்.

நியூ ஆர்லீன்ஸ் நகரத்தில் ஏற்பட்டிருக்கும் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தாருடைய நன்முயற்சியால் அந்நகரத்தில் வாயில்லா ஜந்துக்களுக்கு அங்கங்கே தண்ணீர் குடிக்கத் தண்ணீர்த் தொட்டிகள் அதிகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன இப்பொழுது அங்கே இருபத்தாறு தொட்டிகளிருக்கின்றனவாம்; இன்னும் அவ்வளவு தொட்டிகள் வேண்டுமென்று அதற்காகத் தனவந்தர்களுடைய பொருளுதவியை எதிர்பார்க்கிறார்கள்.

பிலடல்பியாவில் குதிரைகளுக்குத் தண்ணீர்த் தொட்டிகள் வெகு நன்றாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவு மற்றெந்த நகரத்திலும் இல்லையென்னலாம். நாய்களும் பூனைகளுங்கூடத் தண்ணீர் குடிக்கும்படி அந்தத் தொட்டிகள் அவ்வளவு தாழ்வாயிருக்கின்றன. ஆனால் அங்கொரு விசேஷம்: அவ்விடத்துச் சாராயக்கடைகளுக்குப் பக்கத்திலேயே இத்தொட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தங்கள் கடையண்டை வாயில்லா ஜந்துக்களுக்குத் தண்ணீர்த்தொட்டி வைத்திருந்தால் தங்கள் வியாபாரத்துக்கு மிகவும் அனுகூலமென்று கண்டு அவர்களே அந்தத் தொட்டிகளை வைத்துக் காப்பாற்றிவருகிறார்கள். சாராய வியாபாரமாகிய கெட்ட காரியத்திற்கு அபிவிருத்தி யுண்டாக்கவேண்டுமென்கிற ஆசையானது வாயில்லா ஜந்துக்களுடைய வருத்தத்தைப் போக்கும்பொருட்டு இந்த நற்காரியம் செய்ய அவர்களைத் தூண்டிவிட்டது மிகவும் கொண்டாடத்தக்கதே. ஜீவகாருண்யத்தைப்பற்றியே அதிகமாகப் பாடுபடுகிறவர்களால் செய்யமுடியாத பெரிய காரியத்தை அவர்கள் செய்துவிட்டார்களல்லவா?

நன்றியறிவுள்ள நாய்.

ஒரு பிரபு தன்னுடைய நாயின் நல்லறிவைப் பற்றி வியந்து சொன்னதாவது:—ஒருநாள் நான் வெளியேபோகப் பிரயாணப்பட்டேன். அப்பொழுது வழிச்செலவுக்குப் போதுமான பணம் பையில் இருக்கிறதா என்று பார்க்கும்பொருட்டுப் பையிலுள்ள சில்லரையைக் கீழே கொட்டி எண்ணிப் பார்த்து எடுத்துக்கொண்டு பிரயாணம் போய்விட்டேன். போகும்போது என்னுடைய அன்பான நாயைக் கூட அழைத்துக்கொண்டுபோகாமல் வீட்டிலேயே நிறுத்திவிட்டுப் போனேன். நான் போகவேண்டிய ஊருக்குப் போய்ச் செலவுவாங்கப் பையிலிருந்து பணத்தை யெடுக்கப் பார்த்தபோது, அதில் ஒரு பொன்காசு குறைவாயிருந்தது. மறுநாள் நான் திரும்பி வீட்டுக்கு வந்தேன். அப்பொழுது சேவகன் எதிர்கொண்டு ஓடிவந்து, ‘சாமி!

நேற்றுமுதல் நம்முடைய நாய்க்கு உடம்பு மிகவும் அசௌக்கியமா யிருக்கிறது; அது இரையெடுக் கவேயில்லை; நாம் என்ன நிற்பந்தப்படுத்தினாலும் அது எதையும் தின்ன உடன்படாமலிருக்கிறது. இதற்கு என்னசெய்வது?' என்று சொன்னான்.

உடனே நான் வீட்டுக்குள் நுழைந்து என் பிரிய மான பிராணி படுத்திருக்கும் இடத்திற்குப் போ னேன். அது என்னைக் கண்டவுடனே எழுந்து ஓடிவந்து என் பொன் நாணயத்தை என் காலண் டை கீழே வைத்துவிட்டுப் பிறகு தனக்காக வைத் திருந்த உணவை ஆவலுடனே தின்னப்போயிற்று. உண்மை யென்னவென்றால், முதனாள் காலை யில் நான் பணத்தைக் கீழே கொட்டி யெண்ணும் போது தெரியாமல் அந்தப் பொன்காசைக் கீழே போட்டுப் போய்விட்டேன். அந்த நல்ல நாய் அதைக் கண்டு எடுத்து, எவரும் களவுசெய்யாதபடி அதைத் தன் யஜமானனிடம் சேர்ப்பிக்கவேணு மென்று நான் வருகிறவரையில் அதைத் தன் வாயி லேயே வைத்துக்கொண்டிருந்தது போலும். அத னாலேயே அது இரை தின்னவும் வாயைத் திறக்க வும் சாத்தியப்படாமல் ஒரு நாளெல்லாம் பட்டினி கிடந்தது. இப்படிப்பட்ட நல்லறிவுள்ள நாய்க ளையோ நாம் அன்புடன் ஆதரியாமல் வெளியே வெயிலிலும் மழையிலும் குளிரிலும் வருந்தி யல் லாடி அவஸ்தைப்பட விட்டுவிடுவது.

ஒரு பெரியவருடைய கதை.

ஒரு தோட்டத்தில் எழெட்டுப் பிள்ளைகள் கூட் டம் கூடியிருந்தார்கள். அங்கே ஆதரிப்பாரில்லாத ஒரு நாய் அந்தப் பிள்ளைகள் செய்யும் இம்சைக்குப் பயந்து ஒரு புதரின்கீழே போய் ஒளித்துக்கொண் டது. நாய் அந்தப் புதரின் கீழிருப்பதை அப்பிள் ளைகளில் சிலர் குனிந்து பார்த்துக்கொண்டிருந்தார் கள்; வேறு சிலர் கல்லையும் கட்டியையுமெடுத்து அதன்மே லெறிந்தார்கள்; இன்னும் சிலர் ஆ! ஊ!! என்று கூச்சலிட்டு அதற்குப் பயமுறுத்திக்கொண் டிருந்தார்கள். அவர்களுடைய பெருங்கூச்சலில் அவ்வழியாக வந்த ஒரு வண்டியின் உருளையோசை அவர்கள் காதில் கேட்கவில்லை; அதில் ஏறிவந்த மனிதனையும் அவர்கள் பார்க்கவில்லை; அப்படி யிருக்க, திடீரென்று ஒரு மெதுவான குரல் அவர் கள் காதில் கேட்டது.

'பிள்ளைகளே! நீங்கள் இங்கே செய்வது என்ன?' என்று வண்டியில் வந்த பெரியவர் அந்தப் பிள்ளை களைக் கேட்டார்.

அந்த வார்த்தை காதில் பட்டவுடனே இரண் டொரு பிள்ளைகள் வெட்கமடைந்தவர்போல் சற்று ஒதுங்கி நின்றார்கள். மற்றப் பிள்ளைகளெல்லாம் ஒன்றாய்க்கூடித் தாங்கள் கண்ட அதிசயத்தை அவ ருடன் சொல்லத் தலைப்பட்டார்கள்.

'இந்த நாய்க்குச் சொந்தக்காரர் ஒருவருமில்லை' என்று ஒரு பையன் சொன்னான்.

'இது பைத்தியம்பிடித்த நாய்போலக் காணுகி றது' என்று சொன்னான் மற்றொரு பையன்.

'இந்த நாய்க்குக் கேட்பார் யாரையும் காணோம்; இது இந்தப் புதரைவிட்டு வெளியே வருமானால், இதன் கழுத்தில் ஒரு கல்லைக்கட்டி நாங்கள் இதைக் குளத்தில் அமிழ்த்தப்போகிறோம்' என்று சந்தோ ஷமாய்ச் சொன்னான் இன்னொரு சிறுவன்.

'இது உங்களில் யாரையாவது கடித்ததோ?' என்று அந்த மெதுவான குரல் மறுபடியும் அவர்க ளைக் கேட்டது.

'இல்லை, இது குப்பன் கையை நக்கிற்று; நான் அதிகமான ஜாக்கிரதையோடு இல்லாவிட்டால், இது என்னைக் கடித்தேயிருக்கும்' என்று அவர்க ளில் பெரிய பையன் ஒருவன் மறுமொழி சொன் னான்.

'நீங்கள் எல்லாரும் தனியே விளையாடிக்கொண் டிருக்கும்பொழுது இது உங்களண்டை ஓடிவந்த தாக எனக்குத் தோன்றுகின்றது' என்றார் பெரி யவர்.

சற்றுநேரம்வரையில் ஒருவரும் வாயைத் திறவா மல் பிள்ளைகளெல்லாம் மௌனமாயிருந்தார்கள். அதற்குப்பிறகு படபடப்புள்ளவனான ஒரு பையன் பின்வருகிறபடி உத்தரம் சொல்லத் தொடங்கினான்.

'இல்லை ஐயா, இல்லை; இது எங்களிடம் ஓடி வரவில்லை; தனியே ஒரு எலும்பை வாயில் கவ்விக் கொண்டு சுவரோரத்திலே படுத்திருந்தது. அதைப் பார்த்து நாங்களெல்லாம் கூட்டங்கூடி அதைத் தொந்தரவு செய்யத் தொடங்கினோம்; குப்பன் அதன் வாயெலும்பைப் பிடுங்கப்போனான். அது அவன் கையைக் கடித்தது' என்றான்.

'குழந்தைகளே! ஒரு பெரியவருடைய கதை யைக் கேட்க உங்களுக்குக் கொஞ்சநேரம் ஒழிவு கிடைக்குமா?' என்றார் அந்தப் பெரியவர்.

கதையென்கிற பேச்சைக் கேட்டவுடனே அந் தப் பிள்ளைகளெல்லாரும் அதிகசந்தோஷமடைந்து தங்கள் கையிலிருந்த கற்களையும் கட்டைகளையும் கீழே போட்டுவிட்டு ஒன்றும் பேசாமல் அவர் வாயையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்; இரண் டொரு பிள்ளைமாத்திரம் அதில் ஆஸ்தையில்லாத வர்போல் சற்று உபேக்ஷையாயிருந்தார்கள். அது கண்டு பெரியவர் தன் குதிரையை வீட்டோரமாக நிழலில் ஓட்டிவிட்டுத் தன் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

பிள்ளைகளே! கேளுங்கள், நான் சொல்வது இப் போது உங்களுக்குப் பொய்போலவே தோன்றும்; சிறுவனாயிருக்கையில் நான் கேட்டபோது இது எனக்கும் பொய்போலவே தோன்றிற்று. நான் இப்பொழுது சொல்வது முற்றும் மெய்யானது.

இப்பூமியில் பிறந்த ஒவ்வொருவனுடைய நடத்தையைப்பற்றியும் மேலுலகத்தில் ஒரு கணக்குப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. நன்மையோ தீமையோ, ஒவ்வொரு நிமிஷமும் நாம் செய்யும் செய்கைகள் அதில் எழுதப்படும். விசாரணை வரும்போது நான் இதைச் செய்யவில்லையென்று யாரும் பொய்சொல்ல முடியாது; நாம் எந்தக் காரியம் எவ்வளவு ரகசியமாய்ச் செய்தாலும் சூரியன் சந்திரன் முதலான தேவர்கள் ஸாக்ஷியாய் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் செய்யும் நன்மை தீமைகளே பாபபுண்யங்கள் என்று சொல்லப்படும். பாவஞ்செய்தவன் பொல்லாத துன்பங்களையும், புண்ணியஞ்செய்தவன் பேரின்பத்தையும் அனுபவிப்பான். 'தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்று ஒரு பழமொழியும் உண்டு. நாம் செய்த பாபத்தைப் போக்கிக்கொள்ள நம்மால் ஒருபொழுதும் முடியாது. நாம் செய்த பாபத்தைச் சொல்லிக் கடவுளை வேண்டிக்கொண்டால் அவர் ஒருக்கால் அதை மன்னிக்கலாம்.

பிள்ளைகளே! பாபத்தைச்செய்தவனுக்குமாத்திரமேயல்ல; செய்யச் சொல்லுகிறவனுக்கும், செய்வதைப் பார்த்துச் சந்தோஷிக்கிறவனுக்கும், சும்மா பார்த்துக்கொண் டிருக்கிறவனுக்குங்கூட அதில் பாகமுண்டு. ஆகவே, நீங்கள் செய்யும் கொடுமையைக் கண்ணால் பார்த்தாலும் எனக்கும் பாபமுண்டேயென்று நான் உங்களிடம் ஓடிவந்தேன். உங்கள் செய்கையைப் பார்க்கும்போதே, நான் சிறுவயதிலே செய்த பொல்லாத செய்கைகள் பல இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகின்றன. சிறு வயதில் நான் மிகவும் கொடியவனாயிருந்தேன், எப்பொழுதும் பறவைகளைப்பிடிப்பதும், அவற்றின் சிறகுகளைப் பிச்சுவதும், நாய்களையும் சிறுபிள்ளைகளையும் வருத்தப்படுத்துவதுமே என்னுடைய வேலை. சற்றுப் பெரியவனானபிறகு பக்ஷிகளை வேட்டையாடத் தொடங்கினேன். அப்பொழுது தாய்தகப்பன்மார் எனக்கு எவ்வளவு நல்ல புத்தி சொன்னாலும் நான் கேளாமல் என் மனம்போன படியே நடந்தேன். கடைசியில் என்னுடைய கொடுமையாலேயே என் அருமை நாயொன்று மிகப் பரிதாபமாய் என் காலண்டையே பிராணனை விட்டது. அதைப் பார்த்தபோது, பிள்ளைகளே, எனக்கு மிகுந்த விசனமுண்டாகிவிட்டது. பிராணிகளை இம்சைபண்ணக்கூடாதென்கிற எண்ணம் அப்பொழுதுதான் என் மனத்தில் சிறிதளவு உண்டாயிற்று. அந்தச்சமயம் பார்த்துத் தாய்தந்தையர் எனக்குப் பலவிதமாக நற்புத்திகள் போதிக்கலானார்கள். நான் செய்ததெல்லாம் பொல்லாத பாபமென்று அதன்பிறகுதான் என் புத்தியில் தோன்றியது. நான் செய்த தீமைகள் ஒன்றுகூட வீண் போகாதென்றும், எல்லாவற்றிற்கும் பின்னால் கொடிய தண்டனை விதிக்கப்படும் என்றும் பல நீதிகளை யெடுத்துச்சொல்லி மாதாபிதாக்கள் என்னை நல்வழிப்படுத்தினார்கள்.

பிள்ளைகளே! நான் அதுமுதல் ஜீவகாருணியம் மேலிட்டு, நான் செய்த கொடுமைகளை மன்னிக்கும்படியாக எப்பொழுதும் கடவுளையே பிரார்த்தித்துக்கொண்டு திரிகிறேன். யார் எங்கே என்ன கொடுமை செய்தாலும் அதைப் பார்க்க மனந்தாளாமல் உடனே போய் அதைத் தடுக்கும்படி என் மனம் என்னைத் தூண்டுகிறது. சிறுவர்களே! நீங்கள் இனிமேல் இப்படிப்பட்ட பாபம் செய்யாதேயுங்கள். முக்கியமாக வாயில்லா ஜந்துக்களை வருத்தாதேயுங்கள் என்றான். அதைக்கேட்ட சிறுவர்கள் அன்றுமுதல் தாம் கொடுமைசெய்வதை விட்டுவிட்டார்கள். அப்பொழுதே அந்த நாய்க்கு உணவு வாங்கிப்போட்டு அதைக் காப்பாற்றினார்கள். அந்தப் பெரியவரிடம் தாம் கேட்ட கதையைப் பலருக்கும் சொல்லி ஜீவகாருணியத்தை எங்கும் பரவச் செய்துவந்தார்கள்.

நாய்கள் மனக்கிலேசத்தினால் மரித்தல்.

நாய்களுக்கு மனக்கிலேசம் அதிகமானால், அந்தத் துக்கத்தினாலேயே பல நாய்கள் இறந்துபோகின்றனவென்பது, நாய்களிடத்தில் அன்புள்ள அநேகருக்கு நன்றாய்த் தெரியும். இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒரு சிறு கதை கேளுங்கள்:

ஒரு கனவான்வீட்டில் ஒரு நாய் அருமையாக வளர்க்கப்பட்டுவந்தது. அந்த வீட்டில் குழந்தைகள் அதிகம். அந்தப் பிள்ளைகளோடுகூடவே அந்த நாய் எப்போதும் விளையாடிக்கொண்டிருக்கும். இப்படியிருக்கப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் விடுமுறைநாள் வந்தது. அந்த விடுமுறைக்குப் பிள்ளைகளெல்லாம் கிராமாந்தரம் போய்வரவேண்டுமென்று நிச்சயமாயிற்று. நாயை என்னசெய்கிறதென்று ஆலோசித்தார்கள். கூடவே அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். வீட்டு யஜமானன்மாத்திரம் வெளியே போகச் சாத்தியப்படாமல் அங்கேயே அவசியம் இருக்கவேண்டியதாயிற்று. அதனால் அவன் தனக்குத் துணையாக நாயை நிறுத்திக்கொள்வது நல்லதென்று தீர்மானித்தான்.

அப்பிள்ளைகள் அப்படியே நாயை விட்டுவிட்டுப் பிரயாணப்பட்டுப் போனார்கள். தன் துணைவர்கள் பிரிந்துபோகவே, அந்த நாய் இரையெடுப்பதில்லை; தண்ணீரும் குடிப்பதில்லை; மனக்கிலேசமடைந்த மனிதர்கள் எப்படியிருப்பார்களோ, அப்படியே அந்த நாய் அதிகமான ஸங்கடத்தை அனுபவிக்கலாயிற்று. சிலவேளை அந்த நாய் பிள்ளைகள் விளையாடும் அறையிலே போய் நின்று பரிதாப

மாகப் புலம்பும்; சிலவேளை ஒன்றும் தோன்றாமல் சோர்ந்து விழுந்துகிடக்கும். வாயிலில் ஏதாவது வண்டியோசை கேட்டால், குழந்தைகள் வருகின்றனவோவென்று அங்கே ஓடிப்போய்ப் பார்க்கும். ஒருநாள் அது சிறுவர்களுடைய உடைகளை யிழுத்துத் தன்மேலே மூடிக்கொண்டு சோர்ந்து படுத்திருந்ததை வீட்டுக்காரன் கண்டான்.

அதைப்பார்க்கவே அவன், 'ஐயோ! இந்த நாய் இப்படியாகிவிட்டதே' என்று மிகவும் அதைப்பற்றிக் கவலைப்படலானான். நாளுக்குநாள் அது மெலிந்து இளைத்துப்போயிற்று; முன் பார்த்தவர் மறுபடியும் வந்து பார்த்தால் சிறிதும் அடையாளம் தெரியாதபடி உருமாறிப்போயிற்று. அதுகண்டு அவன் தன் அருமை நாயைக் கையிலெடுத்துக்கொண்டு நாய்வைத்தியம்தெரிந்தஒருவனிடம்போய் அதைக் காட்டி 'அது அப்படி மெலிந்துபோனதற்குக் காரணமென்ன?' என்று கேட்டான்.

வைத்தியன் நாயின் வரலாற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டு 'இது விசனம் பொறுக்கமுடியாமல் மனம் புண்பட்டுப் பிராணனைவிட நிச்சயித்திருக்கிறது. இரண்டுமூன்றுநாள் கடலோரத்திலே கொண்டுபோய் நல்ல காற்றிலுலாவவிட்டுப் பார்த்தால் தெரியும்' என்றான். அதுவரையிலுங்கூட அது பிராணனை வைத்திருக்கவில்லை. துணைவர்களைப் பிரிந்த துயரத்தினால் மரணமடைந்தது.

இவ்வுலகில் இடத்திற்குக் குறைவில்லை.

மிருகங்களையும் பக்ஷிகளையும் கொலைசெய்யா விட்டால் அவைகள் வஸிக்க இவ்வுலகில் இடம் போதுமோவென்று பலர் ஆக்ஷேபிப்பார்கள். இப்பூமியில் மனிதர்களுக்கு இடம் குறைவில்லாமலிருப்பதுபோலவே மற்றப் பிராணிகளுக்கும் இடம் யதேஷ்டமாயிருக்கின்றது. நெடுநாள் வருந்தி உழைத்து வலிகுன்றிய கிழக் குதிரைகளுக்கும், வேண்டுமென்று கொல்லப்படும் பேதைக் குதிரைகளுக்கும் இப்பூமியில் ஆயுளளவும் வஸிக்க வேண்டுமளவு இடமுண்டு; கொலைக்களத்திற்குக் கொண்டுபோய்க் கொல்லப்படும் ஆடுகளுக்கும் யதேஷ்டமாய் இடமிருக்கின்றது; தமக்கு அவசியம் வேண்டுமென்கிற வீண் சாக்கினாலோ அறியாமையாலோ கொல்லப்படுகிற அழகான பல பறவைகளுக்கு வானத்திலும், பற்பல மிருகங்களுக்குக் காட்டிலும் ஸஞ்சரிக்க அளவற்ற இடமிருக்கிறது. அப்படியிருக்க அவைகளைக் கொல்வது என்ன அநியாயமோ, என்ன அக்கிரமமோ, என்ன உபேக்ஷையோ!

சிறந்த காரியம்.

வெகுநாளைக்கு முன்னே வியாபாரி ஒருவன் இருந்தான். வர்த்தகத்தில் அவனுக்கு விசேஷமான பணம் சேர்ந்துபோயிற்று. அவனுக்குப் பிள்ளைகள் மூன்றுபேர். வியாபாரி தனது வாழ்நாள் முடியுங்காலம் சமீபித்துவிட்டது என்று கண்டு, தன்னுடைய தனத்தை எல்லாம் பிள்ளைகள் மூன்றுபேருக்கும் பங்கிட்டுக் கொடுக்கத் தீர்மானித்தான். அவனிடத்தில் விலையுயர்ந்த ஆபரணம் ஒன்று இருந்தது. அதை மூன்றுபேருக்கும் எப்படி பங்கிட்டுக் கொடுப்பது? அதனால் எவன் சிறந்த காரியம் செய்கிறானோ, அவனுக்கே அந்த ஆபரணத்தைக் கொடுக்கவேண்டுமென்று நிச்சயித்து, மூன்று பிள்ளைகளையும் பக்கத்தில் அழைத்து, என் அருமை மக்களே! மூன்று மாதத்திற்குள் உங்கள் மூவரில் எவன் சிறந்த காரியம் ஒன்று செய்கிறானோ, அவனுக்குத்தான் இந்த மேலான ஆபரணத்தைக் கொடுக்கப்போகிறேன் என்று சொன்னான்.

அப்படியே செய்யும்படி பிள்ளைகள் ஒப்புக்கொண்டுபோய் மூன்றாம் மாதம் முடிந்ததும் மூன்று பிள்ளைகளும் தகப்பனிடம் வந்து சேர்ந்தார்கள். மூத்தகுமாரன் முதலில் தான் செய்த காரியத்தைச் சொல்லுகிறான்:—அப்பா! சிலநாளைக்கு முன்னே ஒரு மனிதன் பெரிய பை நிரம்பப் பொன்களைக் கொட்டிக் கட்டி என் கையில் கொடுத்துவிட்டுப் போனான். அதற்குச் சீட்டு நாட்டு ஒன்றும் கிடையாது. அவன் முன்பின் ஒருநாளும் என்னைப் பார்த்ததில்லை. ஆனாலும் அவன் திருப்பிவந்து என்னைக் கேட்டவுடனே அந்தப் பொருளை அப்படியே அவனுக்கு நான் கொடுத்துவிட்டேன். அதற்காக அவன் எனக்கு வெகுமதி கொடுக்க வந்தான். அதையும் நான் வேண்டாமென்று மறுத்துவிட்டேன் என்று சொன்னான்.

தந்தை அதைக் கேட்டு நீ செய்தது சிறந்த காரியம் என்று நீ நியாயத்தை செய்தாய் என்றான்.

பிறகு இரண்டாம் குமாரன் சொன்னதாவது:—அப்பா! நான் ஒருநாள் ஒரு ஏரிகரை வழியாய்ப் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு குழந்தை ஏரியில் தவறி விழுந்துவிட்டது. நான் உடனே தண்ணீரில் குதித்துக் குழந்தையை அபாயமில்லாமலெடுத்து, கரைமேலே கோவென்று கதறிக்கொண்டிருந்த தாயின் கையில் கொடுத்தேன். இது சிறந்த காரியமல்லவா? என்று சொன்னான்.

பிள்ளாய் அல்ல அல்ல, இது மனிதருக்கு இயல்பாயிருக்கவேண்டிய நெஞ்சுருக்கமே யல்லாமல் சிறந்த காரியமல்ல என்று தகப்பன் மறுத்துவிட்டான்.

அப்புறம் மூன்றாம் பிள்ளை சொன்னதைக் கேளுங்கள்:—என் அன்புள்ள பிதாவே! ஒரு பசுமாடு ஊரைச்சார்ந்த குன்றின் உச்சிவரையில் ஒருநாள் மேய்ந்துகொண்டுபோய் அங்கே மரத்துநிழலில் செங்குத்தான ஒரு பாறைமேல் அயர்ந்து நித்திரை அடைந்துவிட்டது. அது அப்படியே கொஞ்சம் நகர்ந்தால் கீழே அதிக வேகமாகவரும் காட்டாற்று வெள்ளத்தில் விழுந்து மாண்டுபோகும். அதைப் பார்த்து நான் ஐயோ வென்று இரங்கி, அதிக ஜாக்கிரதையுடன் அந்த வாயில்லாப்பசுவைமெல்ல வாலைப்பிடித்து அப்புறம் ஒரு பத்திரமான இடத்திற்கு இழுத்துக்கொண்டு போய்விட்டேன்! அது காயப்படாமல் எழுந்து ஊர்போய்ச் சேர்ந்தது என்று கூறினான்.

அதைக் கேட்டுத் தகப்பன் மிகுந்த சந்தோஷமடைந்து அவனைக் கட்டிக்கொண்டு என் அருமை மகனே, நீ அபாயத்திலிருந்த பேசமாட்டாத பசுவுக்கு உன் தலைப்பாடாகச் செய்த உபகாரமல்லவோ சிறந்தகாரியம். உயிர் உதவிக்கு மிஞ்சின உதவி வேறில்லை. புண்யவானுக்கு முன்னே நல்யோசனை போகும், அதற்கு முன்னே அதிருஷ்டம் போய் நிற்கும். இந்த ஆபரணம் உன்னுடையது என்று சொல்லி அதை அவனுக்குக் கொடுத்தான்.

ஜந்துக்களுக்கு உபாயம் கற்பித்தது யார்?

இராகம், தேசிகதோடி.] [தாளம், சாப்பு.

எழுசீர்த் தாழிசைக் கண்ணிகள்.

1. பட்சி கட்குச் சிறுகுச்சி வைக்கோலுலர்
பாசியு நார்சண லாதிகளால்
பட்சமுடன் சிறு கூடுகள் பின்னிடப்
பண்புடன் கற்றுக் கொடுத்தவனார்.

2. வண்டுகள் வண்ணாத்திப் பூச்சிகள் நல்ல
மணமலர் தோறும் பறந்தேகிக்
கண்டுயர் தேனைத் திரட்டிவைத்தே மழைக்
காலத்தி லுண்ணக் கற்பித்தவனார்.

3. சிற்றெ றும்புத் திரள்கட்குப் புவியிற்
சிறுமுடுக்குத் துளை செய்துகொள்ள
உற்றிடு கோடை மிகுங் காலத்தி
லுணவு சேர்த்துக்கொள்ளச் சொன்னவனார்.

4. மேலே பறந்திடா வாத்துக ளன்னம்
வியன்குளம் குட்டைக ணீந்திச்சென்றே
சால்புழு பூச்சி யருந்திமண் மேன்முட்டை
தானிட்டுக் காக்கக் கற்பித்தவனார்.

5. இந்த வுலகம் படைத்தளிக்கும் செக
தீசனெனும் பரி பூரணனே
யந்த வுயிர்கள் சுகம் பெற்றுவாழ
வதிகவுபாய மதைக் கொடுத்தான்.

6. மானிட ரான சிறுவர்கள் தன்னை
வணங்கித் துதிசெய்து வாழ்ந்திடவே
தானருளா லுயர் கட்டளை யிட்ட
தலைவனு மந்தத் தனிப்பரனே.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1906.